பொது நூலகம்
யாழ்ப்பாணம்
தினசரி சேர் நூலகம்.

Registered as a News-paper

மங்கள வைபவங்களுக்கு தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூபா
5-00

இன்றைய அறிமுகர்!
நாளைய நாகரிகர்!!
உதிக்க ஆடைகளில்
சோபிக்க கோபிராஜ்
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 04 வெள்ளிக்கிழமை (21 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 329

# ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னரே தீர்வு குறித்து உருப்படியான பேச்சு

## அன்றாடப் பிரச்சினைகளை நீக்க அதற்கு முன் நடவடிக்கை

கொழும்பு, ஒக்ரோபர். 21

இனப்பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு காண்பதற்கான உருப்படியான பேச்சுக்கள் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற பின்னரே இடம் பெறும் என்று அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர்கள் மட்டப் பேச்சுவார்த்தைகளை, ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் —

அப்போது அரசியல் விவகாரம் — அடிப்படைப் பிரச்சினை — பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மட்டப் பிரச்சினையி முன்னேற்றம் கண்ட பின்னரே சந்திரிகா—பிரபாகரன் சந்திப்பு இடம் பெறும் என்றும் அதே வட்டாரங்கள் கூறின.

தற்போது இரண்டாம் நிலைத் தலைவர்கள் மட்டத்திலான பேச்சுக்களே நடைபெறுகின்றன—

இந்தப் பேச்சுக்களின் மூலம் தமிழ் மக்களின் அன்றாடக் கஷ்டங்களை நீக்கிக் கொண்டு—

அதன் பின்னர் அடிப்படைப் பிரச்சினை விவாதத்துக்கு எடுக்கப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் முன்வைக்கவிருக்கும் தீர்வானது, ஒற்றை ஆட்சி (Unitary) முறையை விடுத்து ஒன்றுபட்ட நிலையைக் (Unified) கொண்டிருக்கும் என்றும்—

அது சமஷ்டியா அல்லது வேறு அமைப்பா என்பது அமைச்சர்கள் மட்ட பேச்சின் போது தீர்மானிக்கப்படும் என்றும்— பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கட்கிழமை பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## லெப். கேணல் சந்தோசம் நினைவு நாள்

யாழ்ப்பாணம், ஒக். 21

லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரரின் நினைவு நாளாகிய இன்று மாலை 4.00 மணிக்கு லெப். கேணல். சந்தோசம், லெப். கேணல். பொன்னம்மான், லெப். கேணல். புலேந்திரன் ஆகிய மூவரினதும் நினைவுருவங்கள் ஒன்றாக வரையப்பட்ட ''கட்அவுட்'' ஒன்று யாழ் காங்கேசன்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சின் கூட்டறிக்கையை பரிசீலிக்கிறார் சந்திரிகா!

கொழும்பு, ஒக். 21

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் நடந்த முதற்கட்ட பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை பிரதமர் சந்திரிகாவின் பரிசீலனைக்குத் தாம் சமர்ப்பித்திருப்பதாக திரு. லயனல் பெர்னாண்டோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமரின் செயலாளர் திரு. பாலபட்டபெண்டியும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திரு. கரிகாலனும் கையெழுத்திட்ட அந்தக் கூட்டறிக்கையில் யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துக்கு வீதியை பயன்படுத்துவது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதமர் அதனையும் பரிசீலித்து வருகிறார்.

இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள விவரங்கள் தொடர்பாக பிரதமர் சந்திரிகாவின் கருத்துக்கள் நேற்று அல்லது இன்று வெளியாகும் என்றும் திரு. லயனல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## இரு நாடுகளுக்கிடையிலான பேச்சுப்போல் இருந்தது

### முதல்கட்ட சந்திப்பு பற்றி முஹம்மது

கொழும்பு, ஒக். 21

அரசுத்தூதுக்குழு யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் நடத்திய முதற்கட்டப் பேச்சு, இரு நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை போன்று அமைந்திருந்தது.

முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மது முன் கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர் காமினி திஸநாயக்காவை ஆதரித்து பொரளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹேமா சகிதம் காமினி வவுனியா வருகிறார்!

வவுனியா, ஒக். 21

ஐ. தே. க. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக எதிர்க் கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்க நாளை சனிக்கிழமை வவுனியாவுக்கு வருகிறார்.

காமினிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதற்காக திருமதி ஹேமா பிரேமதாஸ, ஏ. எச். எம். அஸ்வர் எம். பி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் மனோநிலை இப்போது சரியில்லையாம்!

கொழும்பு, ஒக். 21

அரசு சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்கிய நாள்முதல் அமைதி சமாதானத்தையே நாடுவதாக இராணுவம் அதிகாரபூர்வமாகக் கூறிவந்தது. ஆனால் அந்தச் சமாதானம் எந்த விலையையும் கொடுப்பதாக அமையக் கூடாது என்றும் இராணுவம் கூறிவந்தது. ஆனால் கௌரவத்துடனான சமாதானம் என்ற வார்த்தைகள் இப்போது கூறப்படுகிறதுஎனினும் இப்போது இராணுவத்தின் மனோநிலை சரியாக இல்லை என்று மூத்த இராணுவ அதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாம் கட்டப்பேச்சு ஒருநாள் மட்டுமே நடக்கும்

கொழும்பு. ஒக். 21

விடுதலைப் புலிகளுடன் அரசுக்குழு நடத்தும் இரண்டாம் கட்டப் பேச்சு ஒருநாள் மட்டுமே நடைபெறும் என்றும்—

இப்பேச்சின்போது விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம் பற்றி தெரிவிக்கும் ஆலோசனைகளை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதே அரசுக் குழுவின் முக்கிய பணியாக இருக்கும் என்று பி. பி. ஸி. செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன் பின்னரே பிரதமர் சந்திரிகா பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி யுத்த நிறுத்தம் பற்றி முடிவெடுப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக்கு மின்சாரம், தொலைபேசி உட்பட பிறவசதிகளைச் செய்து கொடுப்பது பற்றி பரிசீலிக்க யாழ். செல்லவிருக்கும் தொழில்நுட்ப பொறியியல் அதிகாரிகளுக்கு, விடுதலைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



எல்லாம் தடல்புடலாக நடக்குது பாருங்கோ காரியம் ஒப்பேற வேண்டுமே..!

## தேர்தலில் போட்டியிடாது விலக கலப்பதி விதிக்கும் நிபந்தனை

கொழும்பு, ஒக். 21

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த நிரந்தரமான வாக்குறுதியை பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதியும் பிரதம மந்திரியுமான சந்திரிகா குமாரதுங்கா இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அறிவித்தால் —

நிபந்தனைகளின்றி ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிகால் கலப்பதி நேற்றுக் கூறினார்.

பிரதமர் இவ்வாக்குறுதியை சகல தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஜே.வி.பி. பொதுச் செயலாளர் சோமவன்ஸ அமரசிங்கவின் எழுத்துமூல வேண்டுகோளை கருத்திற் கொண்டு கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரங்கள் உள்ள பிரதமர் அமைப்பு கொண்ட அரசியலையும் தாம் ஆதரிக்கவில்லை என்று கூறிய கலப்பதி, தனியே ஒருவருக்கு நிறைவேற்று அதிகாரங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் சேஷன் நூல் எரிப்பு

சென்னை, ஒக். 21

இந்தியாவின் தேர்தல் ஆணையாளர் சேஷன் எழுதிய நூல் ஒன்றில் சி. என். அண்ணாத்துரை அமெரிக்க சி. ஐ. ஏ. நிறுவனத்தின் ஒற்றராகப் பணிபுரிந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. இதை ஆட்சேபித்து தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்த நூல் எரிக்கப்பட்டுள்ளது. (க)

## பஸ் ஆசனத்தின் கீழ் வெடி பொருள்கள்!

### பதுளையில் இருவர் கைது

கொழும்பு, ஒக். 21

பதுளை சென்று கொண்டிருந்த பஸ்ஸின் ஆசனம் ஒன்றின் கீழ் வைக்கப்பட்டிருந்த உயர்சக்தி வெடிப் பொருள்களை பொலீஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹோமாகம பிரதேசத்தில் கலவிலாவத்த என்ற இடத்தில் வைத்து ஹோமாகம பெப்லீஸாரும் இராணுவத்தினரும் பஸ்ஸை மறித்து கூட்டாக நடத்திய தேடுதலின் போது இவ்வெடிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

அந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த தமிழ்ப்பெண் ஒருவரையும் முஸ்லிம் ஆண் ஒருவரையும் பொலீஸார் இது தொடர்பாகக் கைது செய்தனர்.

பஸ்ஸை வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்கு இச் சந்தேக நபர்கள் திட்டமிட்டிருக்கலாம் என்று பொலீஸார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூ. மொ. வி. கிளை ஒன்றை யாழ். நகரில் திறக்க முடிவு

### உணவு அமைச்சர் வருவாராம்

யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் (சி. டபிள்யூ. ஈ.) கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் பணிப்புரையின்பேரில் வர்த்தக,வாணிப, உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன தமது அமைச்சினதும் கூ. மொ. வி. ஸ்தாபனத்தினதும் உயர் அதிகாரிகளுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மக்களுக்கு அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் உணவுப்பொருள்கள் கிடைப்பதற்கு வசதியாக இம்மாத இறுதிக்குள் இந்த கிளையை திறப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்கு முன்னர் இடம் பெறவுள்ள திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் விக்கிரமரத்ன உயர் அதிகாரிகளுடன் யாழ்ப்பாணத்திற்கு செல்லுவதற்கும் தீர்மானித்துள்ளார் என்று இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## மட்டக்களப்பு பகுதி சுற்றிவளைப்பு கைதானோர் மீது கடும்தாக்குதல்

மட்டக்களப்பு, ஒக், 21

மட்டக்களப்பில் ஸ்ரீ லங்கா படையினர் பாரிய சுற்றிவளைப்புக்களை நடத்தி தமிழ் மக்களை கைது செய்துள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி தாந்தாமலைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலீஸ் அதிரடிப்படையினரும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

அன்று காலை 6.30 மணியளவில் மாவடி மாமாரி பிரதேசத்திலுள்ள 19 ஆம் கட்டை இராணுவ முகாமிலிருந்து வந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் தாந்தாமலை, பன்சேனை, இரும்பன்வெட்டை, சில்லிக்கொடியாறு ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்து நீண்ட நேரம் சோதனையிட்டனர்.

சோதனையின்போது 5 தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களை இராணுவத்தினர் மிக கொடூரமாக தாக்கிய பின்னர் விடுவித்தனர் என்று செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை தாந்தாமலை பகுதியை சுற்றிவளைத்த பொலீஸ் அதிரடிப்படையினர் வயோதிபப் பெண் ஒருவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். மேலும் இரு பெண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சிமெந்து தொழிற்சாலையை திருத்த

## காங்கேசனுக்கு நேற்று 18பேர் கொண்ட குழு

கொழும்பு, ஒக். 21

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையைத் திருத்துவது பற்றி பரிசீலிப்பதற்கு 18 பேரைக் கொண்ட பொறியியலாளர்களும் அதிகாரிகளும் அடங்கிய குழு ஒன்றை அரசாங்கம் நேற்று காங்கேசன்துறைக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெரித்தாஸ் சிங்களச் சேவை இத்தகவலை வெளியிட்டது. (இ-6)

### அரசு அறிவித்த போதிலும்

## தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை இல்லை

கொழும்பு, ஒக். 21

களுத்துறைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதாக சிறிலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட 40 தமிழ் அரசியல் கைதிகளும் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை என மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவு கிடைத்த பின்னரே 40 பேரும் விடுதலை ஆவார்கள் என களுத்துறை சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எதுவித காரணமுமின்றி காவலில் உள்ள கைதிகள் உடன் விடுதலை செய்யப்படுவார்கள் என சிறிலங்காவின் நீதி அமைச்சு அறிவித்திருந்தது.

அறிவிப்பு வெளியான பின்னரும் மகஸின் சிறைச்சாலையில் மட்டும் இன்னமும் 200 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

## அரசின் சமாதான முயற்சிகளுக்கு கொழும்பு ஆயர்கள் வரவேற்பு

கொழும்பு, ஒக். 21

கொழும்பு ஆர்ச்பிஷப் நிகொலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவும் கொழும்பு பிஷப் ஒஸ்வால்ட் கோமிஸும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

தம்மைச் சந்தித்த அமைச்சர் சிறிபால டி சில்வாவிடம் ஆர்ச் பிஷப் தனது பாராட்டுகளை வெளியிட்டார்.

நாட்டில் அமைதி, சமாதானத்தைக் கொண்டு வரும் இம்முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-எ)

## நூலக புனரமைப்புக்கு அரசின் நன்கொடைதிட்டம்!

கொழும்பு, ஒக். 21

யாழ். பொது நூலகத்தை புனரமைக்க நன்கொடைத் திட்டம் ஒன்றை அரசு ஆரம்பிக்கவுள்ளது

யாழ். பொது நூலகத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு நன்கொடைகளைச் சேகரிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்குமாறு கோரி, கலாசார, சமய விவகார அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி முன்வைத்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது. (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

பக்தியுடன் யான் பூசித்து அணிந்திருந்த, நீலம் சிவப்பு நிறப் பவள மணிகள் கோர்த்து, 'ஓம்' பென்ர னுடன் கூடிய மாலை, சென்ற புதன்கிழமை சங்கா னைக்குச் சைக்கிளில் சென்றபோது மானிப்பாய் — சண்டிலிப்பாய்க்கு இடையில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் சுதுமலை அம்மன் கோயிலடியிலுள்ள குருக்களிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப் படும்.

(33444)

## இரு வயலினிசை நிகழ்ச்சி

காலம்: 22-10-94 சனிக்கிழமை மாலை 5.00 மணி

இடம்; இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை மண்டபம்

வயலின்: திரு. R. இராதாகிருஷ்ணன்
திரு. S. கோபிதாஸ்

மிருதங்கம்:
மிருதங்கபூபதி A. சந்தானகிருஷ்ணன்

கெஞ்சிரா: திரு. M. சிதம்பரநாதன்

கடம்: திரு. K. கண்ணதாசன்

கர்நாடக இசைப்பிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்.

இளந்தொண்டர் சபையினர்

(7675)

## அந்தியேட்டி அழைப்பு



மண்ணுலகில்:
20 – 01 – 1928

விண்ணுலகில்:
21 – 09 – 1994

### அமரர் நா. இரத்தினம்

உத்திராவத்தை புலோலி வட - கிழக்கு
பருத்தித்துறையைச் சேர்ந்தவரும்,
ரடணம், ராஜம் ரான்ஸ்போட்
ஆகியவற்றின் முன்னாள் உரிமையாளருமான
நா. இரத்தினம்
21 – 09 – 1994 இல் விண்ணுலகில் கலந்தார்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (21-10-1994) நடைபெறும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, மகள்.

''ராஜம் இல்லம்''
உத்திராவத்தை,
புலோலி வட-கிழக்கு,
பருத்தித்துறை.

[33438]

# மக்களுக்காகச் சேவை புரிந்தவர் அமரர் டாக்டர் பொன்னம்பலம்

## நினைவஞ்சலி வைபவத்தில் டாக்டர் கணேசரட்ணம்

யாழ்ப்பாணம், ஒக். 21

சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். பொன்னம்பலம் கடந்த 18 வருடங்களாக மக்களுக்காகச் சேவை செய்தவர். அவரது அளப்பரிய சேவைகளை எவரும் மறக்க முடியாது.

சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். கணேசரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் எஸ். பொன்னம்பலத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் திங்களன்று நடைபெற்றது.

யாழ். போதனா வைத்திய சாலை விரிவுரை மண்டபத்தில் டாக்டர் என். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் கணேசரட்ணம் தொடர்ந்து பேசுகையில், டாக்டர் பொன்னம்பலம் தாம் வாழ்ந்த காலத்தில் தன்னலம் கருதாது சேவையாற்றி இருந்தார் என்றார்.

டாக்டர் எஸ். சிவகுமாரன் பேசுகையில்—டாக்டர்பொன்னம்பலம் லீவு எடுக்காது கடமையாற்றினார். 65வயது வரை நோய் இன்றி வாழ்ந்த அவருக்கு கடவுளின் அருள் நிச்சயம்கிடைக்கும் என்றார்.

டாக்டர் திருமதி எம். கருணாகரன் பேசுகையில்— 1990இல் யாழ். போதனா வைத்தியசாலை மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்த போது அதனைத் தொடர்ந்து இயங்க வைத்தவர் டாக்டர் பொன்னம்பலம் என்றார்.

பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் பேசுகையில்— போதனா வைத்திய சாலைக்கு மாத்திரமன்றி மருத்துவ பீட மாணவர்களுக்கும் டாக்டர் பொன்னம்பலம் பெரும் பணியாற்றினார் என்றார்.

பீடாதிபதி பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் பேசுகையில்— மருத்துவ பீடத்துக்கு பெரிதும் துணையாக இருந்த டாக்டர் பொன்னம்பலத்தின் இழப்பு இன்றைய நிலையில் ஈடுசெய்ய முடியாதது என்றார்.

டாக்டர் எஸ். பி. ஆர். சேர்மாறன் பேசுகையில்— டாக்டர் பொன்னம்பலம் போதனா வைத்தியசாலைக்கும் மருத்துவ பீடத்துக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் சேவை புரிந்தவர் என்றார்.

மற்றும் திரு. மார்க்கண்டு, திரு. கைலாசபிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

''பொன் ஒளி'' மலர் வெளியீட்டு வைபவமும் இடம் பெற்றது.

பணிப்பாளர் டாக்டர் என். கனகரத்தினத்திடமிருந்து மலரின் முதல் பிரதியை திருமதி கமலாம்பிகை பொன்னம்பலம் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் டாக்டர் பொன்னம்பலத்தின் திருவுருவப் படங்களை டாக்டர் எம். கணேசரட்ணம், டாக்டர் எஸ். சண்முகலிங்கம், டாக்டர் என். கனகரத்தினம் ஆகியோர் திரை நீக்கம் செய்தனர்.

இறுதியில் டாக்டர் கே. விவேகானந்தன் நன்றி தெரிவித்தார். (இ)

## வீதி திருத்தும் வேலைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சில வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன.

தார் முடிந்திருப்பதால் பிரதான வீதிகள் திருத்தும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (க-17)

## அடுத்தகட்டப் பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை

### தினகரன் ஆசிரிய தலையங்கம்

கொழும்பு ஒக். 21

''யாழ்ப்பாணம் சென்ற அரசுத் தூதுக் குழுவின் தலைவர் பாலபட்டபென்டியும் லயனல்பெர்னாண்டோவும்தமிழ் மக்களின் அபிலாஷைகளை உணர்ந்து கொண்டனர்.

''இதனால் அடுத்த கட்டப் பேச்சுக்கள் முக்கியத்துவம் பெற விருக்கின்றன.''

இப்படி தினகரனின் 17ஆம் திகதிய ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## தசாக கிரகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

காலம் சென்ற எமது தந்தையார்
பிரம்மஸ்ரீ ஏ. சோமசுந்தரஐயர் அவர்களின்
ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

21-10-94 வெள்ளி பகல் 11 மணி தசாகம்
22-10-94 சனி பகல் 10 மணி மாசியம்
23-10-94 ஞாயிறு பகல் 10 மணி சபிண்டீகரணம்
24-10-94 திங்கள் பகல் 12 மணி கிரகயஞ்ஞம்

இவ் வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்.

சிவன் கோயிலடி,
சித்தன்கேணி.

[33410]

யாழ். மாவட்ட
வணிகர் கழகங்களின் இணையம்

## முக்கிய அறிவித்தல்


எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 22—10—94, 23—10—94, 29—10—94, 30—10—94 சனி, ஞாயிறு கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாம் என அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

செயலாளர்.

[சி-9418]

## நினைவுப் பேருரை



காலஞ்சென்ற சிறுவர் வைத்திய நிபுணர்,
வைத்திய கலாநிதி

### அ. சிவபாதசுந்தரம்

நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

பேருரை விடயம்: ''யாழ்ப்பாணத்தில் சிறுவர்களின் ஆரோக்கிய நிலை''

பேருரை வழங்குபவர்: சிறுவர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி வி. எம். கருணாகரன்(முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

பதிவாளர்.
யாழ். பல்கலைக் கழகம்

(சி/9419)

# யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி வழங்கும்

# "நாத நர்த்தனம்"

## நாதஸ்வரம், பரதம் இணைந்த நிகழ்ச்சி

நாதஸ்வரம்: நாதஸ்வரக் கிரவுஞ்சம் திரு. வி. கே. பஞ்சமூர்த்தி

பரதம்: நாட்டிய விஷாரத் செல்வி விக்னேஸ்வரி சரவணமுத்து

★ திருநெல்வேலி கலா பவனம் அளிக்கும் நாட்டிய நிகழ்ச்சி ★

★ இடம்: பாடசாலை மேபிள் தம்பையா மண்டபம்

★ காலம்: ஒக்டோபர் 23, 1994 ஞாயிற்றுக்கிழமை, மாலை 5 மணி

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

சோபிகா நகை மாளிகை
222, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கனகசபை தர்மகுலசிங்கம்
539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-9417]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்காக ஈராக்

# நகர்த்திய சதுரங்கக் காயே படை குவிப்பு

மாதமுற்பகுதியில் வளைகுடாவில் உருவாகிய நெருக்கடி தற்பொழுது தணிந்துவிட்டது. ஈராக் தனது படைகளில் பெரும் பகுதியை விலக்கிக்கொண்டுள்ளது.

**படைக்குவிப்பும் வாபஸூம்**

ஆரம்பத்தில் ஈராக் குவைத்துடனான எல்லையில் பெருமளவு படையினரை குவித்திருந்தது.

குவைத் மீது ஈராக் மீண்டும் ஆக்கிரமிப்பு நடத்த முஸ்தீபு செய்வதாக அமெரிக்காவும், பிரிட்டனும், வளைகுடாவில் உள்ள அவற்றின் நட்பு நாடுகளும் அச்சம் தெரிவித்தன. எதிர் நடவடிக்கைகளிலும் அவை இறங்கியிருந்தன.

அமெரிக்காவும் பிரிட்டனும் விரைந்து தமது துருப்புக்களை கப்பல்களில் குவைத்துக்கு அனுப்பியிருந்தன. ''பேற்றியட்'' ஏவுகணைகளையும் அமெரிக்கா குவைத்துக்கு அனுப்பியது. குவைத்தும் தனது படைகளை உஷார்ப்படுத்தியது. முழு வளைகுடாவிலும் பதற்ற நிலை உருவாகியது.

எல்லையில் குவிக்கப்பட்ட சுமார் 80ஆயிரம் ஈராக்கிய படைகளின் எந்தவொரு ஆக்கிரமிப்பையும் முறியடிக்கும் விதத்தில் அமெரிக்கா 28 ஆயிரம் பேர் கொண்ட படை அணியை உடனடியாக குவைத்துக்கு அனுப்பி வைத்தது.

நெருக்கடி முற்றுவதைக் கண்டு படைகளை வாபஸ் பெற்றுவருவதாக ஈராக் அறிவித்த பின்னரும் அமெரிக்காவும் பிரிட்டனும் தொடர்ந்து குவைத்தில் படைகளை தற்போது குவித்து வருகின்றன.

1990 ஆகஸ்ட்டில் குவைத்து மீது ஈராக் படை எடுப்பு நடத்திய பின்னர் வளைகுடாவில் உருவாகிய பெரிய நெருக்கடியாக இந்த நெருக்கடி கருதப்படுகிறது.

**1990 ஒகஸ்ட் படையெடுப்பு**

1990 ஒகஸ்ட்டில் ஈராக் படைகள் திடீரென எல்லையைக் கடந்து குவைத்தைச் கைப்பற்றி இருந்தன. ஏழு மாத காலத்துக்கு இந்த ஆக்கிரமிப்பு நீடித்தது. குவைத்தில் 207 கிலோ மீற்றர் பகுதிக்கு ஈராக் உரிமைகோருகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்துடன் 1991 பெப்ரவரியில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஈராக்குடன் யுத்தம் புரிந்து, ஈராக்கிய படைகளை குவைத்தில் இருந்து விரட்டியடித்திருந்தன.

1990 குவைத் மீதான ஆக்கிரமிப்பை அடுத்து ஐ. நா. பாதுகாப்புச் சபை ஈராக்மீது தடைகளை (Sanctions) விதித்திருந்தது.

ஈராக் தனது மசகு எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஈராக்கின் தென் பகுதியில் ஈராக் விமானங்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டது.

**ஐ. நாவின் நிபந்தனைகள்**

ஈராக் மீதான தடைகளை நீக்குவதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை சில நிபந்தனைகளை விதித்திருந்தது.

★ குவைத்தின் இறைமையை ஈராக் அங்கீகரிக்க வேண்டும்.

★ வளைகுடா யுத்தத்தின் போது குவைத்துக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈராக் குவைத்துக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

★ ஐ. நா. அவதானிகள் குழு ஈராக்கின் ஆயுதங்களைப் பார்வையிடவும் நாசகார ஆயுதங்களை அழிக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

முதல் இரு நிபந்தனைகளையும் நிறைவேற்ற ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்ன் (Sadam Hussein) மறுத்துவிட்டார்.

ஆயுதங்களைப் பார்வையிட ஐ. நா. அவதானிகளை மட்டும் அனுமதித்தார்.

32 நாடுகள் அங்கம் வகிக்கும் Unikom எனப்படும் ஈராக்— குவைத் அவதானிகள் சமிஷனில் (UN. Iraq-Kuwait Observer Mission) 1140 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இது யுத்த சூன்யப் பிரதேசத்திலிருந்து ஆக இரண்டு



சதாம் ஹுசேன்

கிலோ மீற்றர் தூரமாகும். குவைத் எல்லையில் இருந்து பத்து கிலோ மீற்றர் தூரம்...

டன.

போதிய உணவு இன்மையாலும் மருத்துவ வசதிகள் இல்லாததாலும் கடந்த நான்கு ஆண்டுகளில் 10 லட்சம் பேர் ஈராக்கில் இறந்துள்ளனர்.

இறந்தோரில் அரைவாசிப் பேர் குழந்தைகள் என்று ஈராக் வர்த்தக அமைச்சர் மொஹமட் மெஹ்டி சாலே (Mohammad Mehdi Saleh) தெரிவித்துள்ளார்.

குவைத்தின் முழுச் சனத்தொகையை விட ஐ. நா. தடைகளால் ஈராக்கில் இறந்தோர் எண்ணிக்கை அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் 25 லட்சம் தாய்மார்களும், சிறுவர்களும் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது.

## ஐ. நா. தடைநீங்கும் அறிகுறி இல்லை நாட்டில் பெருமளவில் பட்டினி நிலை

வளைகுடா யுத்தம் முடிவில் ஐ. நாவினால் ஏற்படுத்தப்பட்ட இந்த கமிஷன் ஈராக்—குவைத் எல்லையில் யுத்த நிறுத்தத்தை கண்காணித்து வருகிறது.

**யுத்த சூன்ய பிரதேசம்**

ஈராக் துருப்புக்கள் குவைத் எல்லையிலிருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் குவிக்கப்பட்டிருந்தது அமெரிக்காவின் உளவுச்செய்மதிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

வரை ஐ. நாவினால் ஏற்படுத்தப்பட்ட யுத்த சூன்யப் பிரதேசம் இருந்து வருகிறது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் ஐ. நா. விதித்த தடைகள் நீக்கப்படவேண்டும் என்று ஈராக் கோரி வருகிறது. ஆனால் ஐ. நாவின் பிரதான நிபந்தனைகளை ஏற்க அது தயாரில்லை.

**பொருளாதார சீர்குலைவு**

இந்தத் தடைகள் ஈராக்கின் பொருளாதாரத்தை பெரும் அளவில் பாதித்துவிட்டது.

பொருளாதாரச் சீர்குலைவினால் ஈராக்கின் நாணயம் மதிப்பிழந்துவிட்டது.

அரிசி, மா, சீனி ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த மாதம் முதல் உணவுப் பங்கீடு அரைவாசியாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்கா 30 வருடங்களுக்கு முன்னர் விதித்த தடையை நீக்கச் செய்வதற்காக கியூபா சமீபத்தில் தனது நாட்டு மக்களை பெருமளவில் அமெரிக்காவுக்கு அகதிகளாகச் செல்லவிட்டது. அமெரிக்காவும் கியூபாவும் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய ஒரு நிர்ப்பந்தத்தை இந்த விவகாரமே ஏற்படுத்திக்கொடுத்தது.

ஆனால் ஈராக்குடன் பேரம் பேச அமெரிக்கா தயாரில்லை.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் பொறுமை இழந்த நிலையில் நகர்த்திய சதுரங்கக்காயே படைக்குவிப்பு எனலாம்.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஈராக்குடன் சமரசத்துக்குப் போகாது அதனுடன் மோத முனைந்த போது ஈராக் தனது படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டது.

பொஸ்னியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக தயாரிக்கப்பட்ட சர்வதேச தீர்வுத் திட்டம்தொடர்பாக வல்லரசு நாடுகளிடையே கருத்து முரண்பாடு நிலவுகிறது. அதே போன்று ஈராக் பிரச்சினை சம்பந்தமாகவும் முரண்பாடு காணப்படுகிறது.

ஈராக் மீதான ஐ. நா. தடை அகற்றப்படவேண்டும் என்று ரஷ்யா கோரிவருகிறது. ஈராக்கின் படைக்குவிப்பால் தற்போது தோன்றியுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் ரஷ்யா தனது தூதுவர் ஒருவரை குவைத்துக்கும் ஈராக்குக்கும் அனுப்பி உள்ளது. ஈராக்கை மேலும் தண்டிப்பது ரஷ்யாவுக்கு விருப்பம் இல்லை.

ஈராக்கின் தென்பகுதியில் பாதுகாப்பு வலையம் ஒன்றை ஏற்படுத்தும் அமெரிக்காவின் யோசனையையும் ரஷ்யா எதிர்க்கிறது.

தென் லெபனானில் இருந்து நடத்தப்பட்டு வந்த கெரில்லாத் தாக்குதல்களை முறியடிப்பதற்காக 1982இல் இஸ்ரேல் படைகள் தென் லெபனானுக்குள் படை எடுத்து பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைத்திருந்தன.

லெபனானின் இறைமைக்கு சவால்விடுப்பது போன்று இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தென் லெபனானில் தங்கி உள்ளன.

**ஜோர்தானின் மனமாற்றம்**

1991 வளைகுடா யுத்தத்தின்போது ஈராக்கை ஆதரித்த ஜோர்தான் இம்முறை ஈராக்கின் நடவடிக்கைகளை எதிர்க்கிறது. பலஸ்தீன விடுதலை இயக்கமும் வளைகுடா யுத்தத்தின்போது ஈராக்கை ஆதரித்தது. ஆனால் அது இம்முறை ஈராக்கை ஆதரிக்கத் தயாரில்லை.

ஈராக்கை ஆதரித்த பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு வழங்கி வந்த பெரும் நிதி உதவியை 1990க்குப் பின்னர் சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகள் நிறுத்தியிருந்தன.

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு பெரும் பண நெருக்கடி ஏற்படுவதற்கும் இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றுக்கு அது நெருங்கி வருவதற்கும் இந்த உதவி நிறுத்தமும் காரணம் எனலாம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர் ஐ. நா. அமெரிக்காவின் கைப்பொம்மையாகிவிட்ட நிலையில் ஈராக் ஐ. நாவின் நிபந்தனைகளை ஏற்பதைத் தவிர வேறு வழி இல்லை என்றே கருதப்படுகிறது.

ஆனால் வளைகுடா யுத்தத்துக்கு முன்னர் மத்திய கிழக்கில் பலம்வாய்ந்த நாடாகக் கருதப்பட்டு வந்த ஈராக் எவ்வளவு தூரத்துக்கு இறங்கிவரும் என்பது கேள்விக்குறியே. ★

**சஞ்சாரன்**

---

# ஈழத்தமிழ் மண்ணின் நேசிப்பை வெளிக்காட்டிய லண்டன் மாநாடு

லண்டனில்வாழும் யாழ்ப்பாணத் தமிழர்கள் பலர் எமது துன்பங்கள் குறித்து அனுதாபப்படுகிற அளவுக்கு உதவி செய்ய முன்வராமை கவலைக்குரியது. அதுவும் தவிர, பொதுவாகத் தமிழ் டாக்டர்கள் இங்கு வருவதற்குத் தயங்குகிறார்கள். எப்படி யாழ்ப்பாணம் வருவது என்று நெஞ்சில் கைவைத்த டாக்டர்களையும் காண முடிந்தது. அவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்வதும் சிரமம். எப்படியானாலும் இது என்னவோ அவர்களைப் பொறுத்த வரையில் நழுவி விடுகிற விஷயமாக இருக்கிறது.

**மாநாட்டின் பின்னணி**

இந்த மாநாட்டின் பின்னணி பிறந்த மண்ணின் நேசிப்பாகும். போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் எல்லாத் துன்பங்களையும் இந்த மாநாட்டில் ஆராய்ந்து பார்த்தார்கள் மக்களின் மருத்துவ தேவைகள், உளவளம் மற்றும் தேக ஆரோக்கியம் பற்றிய விஷயங்கள் குறித்துத் தனித்தனி அமர்வுகள் இந்த மாநாட்டில் இடம்பெற்றன.

முதியோர், கர்ப்பவதிகள், அங்கவீனர், தாய்—தந்தையரை இழந்தோர் என்று எல்லோரையும் சேர்த்து உதவ வேண்டும் என்று இந்த மாநாட்டில் பேசப்பட்டது. வைத்தியர் பற்றாக்குறையை நிவிர்த்தி செய்யும் வகையில் தமிழ் டாக்டர்களை ஐரோப்பிய நகரங்களிலிருந்து இங்கு அனுப்புவதென்று முன்னுரைத்தார்கள். ஆனால், டாக்டர்களை இங்கே அனுப்ப எடுத்த முயற்சிகள் இப்போதைக்குக் கைகூடாது போலத் தெரிகிறது. இது சாத்தியமா, இல்லையா என்பதைப் பிறகு யோசிக்கலாம். மாநாடு அறிக்கை எதையும் இதுவரை வெளியிடவில்லை. பிறகு வெளியாக இருக்கும் மதிப்பீடு அறிக்கையில் இதனை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

**மூலவள மையங்கள்**

மற்றும்படி, போரினால் பாதிப்புற்றோருக்கு உதவுவதற்காக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் மூலவள மையங்களை ஆரம்பிப்பதென இந்த மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த மையங்களை ஐரோப்பாவில் பெரிய நகரங்களில் உள்ள மனித நேய நிலையங்களோடும், தமிழர் அமைப்புகளோடும் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதென்றும் மாநாட்டில் ஆராயப்பட்டது.

ஈழத்திலுள்ள மூலவள மையங்கள் நாடு கடந்த தமிழர் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு தமது தேவைகளைத் தெரிவித்தால் உதவி வழங்க ஏற்பாடாகியுள்ளது. உதவிகளைச் சிறிலங்கா அரசு ஒரு பிரச்சினையாக எடுத்து முட்டுக்கட்டை போட்டால், அனுப்பும் உதவியும் தமிழ் மக்களைச் சென்றடையாது என்று சிலர் கவலை தெரிவித்தார்கள். எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிப்பதை திட்டத்தில் ஒரு பகுதியாக— செயல் திட்டமாக— மாநாடு உறுதி செய்து கொண்டது.

குறுங்கால மற்றும் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் உதவிகள் வழங்குவது பற்றி மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. முதியோர் விடுதி, வடிகால் அமைப்பு போன்றவற்றை நீண்ட கால நோக்கில் செய்வதென்று முடிவாகிற்று. போஷாக்கு மற்றும் மருந்துவகைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதென்ற கருத்து மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தென்படாத தேவைகளை மூலவள நிலையங்களும் சுட்டிக் காட்டலாம்.

> செப்ரெம்பர் 17, 18ஆம் திகதிகளில் லண்டன் பல்கலைக்கழக யூனியன் மானிங் ஹாலில் இலங்கையில் யுத்தத்தினால் பாதிப்படைந்தவர்களுக்குத்துயருதவும் நோக்குடன் சர்வதேச மாநாடு Victims of war in Sri Lanka A Quest for Health Consensus என்ற பெயரில் நடைபெற்றது. இந்த மாநாட்டைத் தமிழர் மருத்துவ நிலையமும் (MIOT), தமிழ் தகவல் மையமும் (TIC) தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்புடன் (TRRO-கலிபோர்னியா) இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.
>
> இந்த மாநாட்டில் மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் சரோஜா சிவச்சந்திரனும் கலந்து கொண்டார். இம்மாநாடு பற்றிய அவரது கருத்துகள் இங்கு தொகுத்துத்தரப்படுகின்றன.
>
> தொகுப்பு:
> ரி. செல்வம்

**ஈழத்தமிழர் சமூகக் குழுமங்கள்**

இங்கிலாந்தில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் சமூகக் குழுமங்களும் (Communit Groups) ஏராளம். இந்தக் குழுமங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மாநாட்டுக்கும் தொடர்பில்லை என்பதை நம்மில் பெரும்பாலோரால் உணரமுடிந்தது. இவர்களால் மாநாட்டுடன் [illegible] முடியாவிட்டாலும், எல்லோரும் ஒருவருக்கொருவர் [illegible] தப்பா பிள்ளை, பெரியப்பா பிள்ளைதான். எங்களைச் சந்திப்பதில் அவர்கள் அக்கறை காட்டினார்கள். விம்பில்டன், ஈஸ்ட்ஹாம் என்று வேறு வேறு இடங்களில் முன்னேற்பாட்டின் பிரகாரம் எம்மைச் சந்தித்தார்கள் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் துன்பங்களைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தனர். அவர்களைப்பற்றிச்சாதாரணமாக நினைத்து விட முடியாது. ஆங்காங்கே சிலர் ஆரவாரமின்றி உதவியாவர்கள் விம்பில்ரன் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா திரு, ஏ. இரட்ணசிங்கம், ஹூசியன் நகர பிதா திரு. சின்னமணியும் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு உதவினார்கள் என்றார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தில் சட்ட ஆலோசகர், இங்கிலாந்து அரசின் குடிவரவு குடியகல்வு அதிகாரி மற்றும் பலரைச் சந்தித்தோம். இலங்கை அகதிகள் சம்பந்தமாக எல்லாக் கோணங்களிலிருந்தும் விளக்கம் கேட்டு விசாரித்தார்கள். முடிந்தவரை அவர்களுடைய சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் விளக்கம் கொடுத்தோம்.

**இங்கிலாந்தில் வாழும் இலங்கைத் தமிழர்**

இறுதியில் இங்கிலாந்தில் வாழும் இலங்கைத் தமிழர் பற்றி நான் பேசினேன்.

பல குடும்பங்களில் பிரிவினை உணர்வு காணப்படுவது மிக மோசமான நிலையாகும். பெரும்பாலான குடும்பங்களில் பெண்கள் தனிமையாக வாழ்கின்ற தன்மையை அவதானிக்க முடிகிறது. மனமுறிவுகளும் மணமுறிவுகளும் சகசமாக உள்ளன. இளந் தலைமுறையினர் மத்தியில் தார்மீக நெறிகள் அற்ற சமூக உறவுகள் காணப்படுகின்றன. வாழும் பிள்ளைகள் பெற்றோருக்குக் கட்டுப்பாடில்லாத நிலையில் வாழ்கிறார்கள். இதனால் பெற்றோர் கவலை அடைந்து இந்தச் சூழலில்தான் யாழ்ப்பாணம் திரும்ப யோசிக்கிறார்கள்.

நடுத்தர வேலை பார்க்கும் வளர்ந்தவர்களும் தமது [illegible] நாட்டம் காட்டுவதில்லை, [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

தெல்லிப்பழை
துர்க்காபுரம் மகளிர் இல்லம்
பன்னிரண்டு ஆண்டு நிறைவும்
பரிசளிப்பு நிகழ்வும்
காலம்: 23-10-94 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3-00மணி
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.
18-10-94
(33389)

---

### இந்திய இராணுவத்தின் பயங்கரவாதம்

# வரலாற்றில் கறை ஏற்படுத்திய யாழ். ஆஸ்பத்திரிப் படுகொலைகள்!

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம், 22 ஆம் திகதிகள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சரித்திரத்தில் இரத்தக்கறை படிந்த கரிநாட்கள்.

அன்று ஒரு தீபாவளி நாள். தமிழரின் வரலாற்றில் அதுவொரு கறுப்பு நாளாகிவிட்டது.

அக்டோபர் பத்தாம் நாள் 1987 ஆம் ஆண்டு, இந்திய அமைதிப்படை இராணுவ நடவடிக்கையை மிகத் தீவிரமாக ஆரம்பித்ததால் கிராமப்புறங்களிலுள்ள மருத்துவமனைகள் யாவும் செய

## மருத்துவமனையில் சாகடிக்கப்பட்ட 68 பேரின் ஏழாம் ஆண்டு நினைவு

லிழந்து போய் இருந்தன. போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

ஏராளமான மக்கள் கொல்லப்பட்டும், காயப்பட்டும் இடம்பெயர்ந்த ஓர் அவல நிலை நிலவியது.

யாழ்ப்பாணம் பொது — போதனா மருத்துவமனைபல இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்குள்ளும் மத்தியில் அப்போது இயங்கிக் கொண்டிருந்தது.

குடாநாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தும் கூட காயப்பட்டவர்கள் இங்கு தஞ்சம் புகுந்தார்கள்.

வேலைப்பழு, போக்குவரத்துப் பிரச்சினை, இராணுவ நடவடிக்கை என்பவற்றினால் பல மருத்துவர்களும், தாதிகளும், மருத்துவமனை ஊழியர்களும் போதனா மருத்துவமனையிலேயே தங்கி தமது கடமைகளைச் செய்து வந்தார்கள்.

**துயரமான நிகழ்வு**

அக்டோபர் 21ஆம் திகதி மாலை 4-10 மணி இருக்கும்.

மருத்துவமனை, நோயாளிகள் என்றுகூடப் பாராமல் உள்ளே புகுந்த இந்திய இராணுவம் நுழையும்போதே துப்பாக்கி வேட்டுக்களை சரமாரியாகத் தீர்த்து வண்ணமே வந்தது.

மருத்துவமனையின் நடைபாதை, எக்ஸ்ரேப்பிரிவுக் கட்டடம், மருத்துவர்களின் ஓய்வு [illegible] நடைபாதை, பணிப்பாளரின் அலுவலக நடைபாதை, அலுவலகம், மேலே மருத்துவர்களின் விடுதி என்பவற்றில் இந்திய இராணுவம் கண்டபடி சுட்டதில் பலர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

குறிப்பாக யாழ். பரியோவான் கல்லூரியில் பயின்று, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முதற்தொகுதி மருத்துவபீட மாணவர்களில் ஒருவராகப் பயின்று, டாக்டராக வெளியேறியது முதல் யாழ் போதனா மருத்துவமனையிலேயே சத்திரசிகிச்சைப் பிரிவில் கடமை புரிந்த டாக்டர் சி. கே. கணேசரட்ணம் மற்றும் டாக்டர் எஸ். பரிமேலழகர், பிரதம தாதி திருமதி பி. வடிவேலு, தாதிகளான செல்விகள் மங்கையர்க்கரசி, லீலாவதி, மருத்துவமனை மேற்பார்வையாளர்களான திரு. செல்வராஜா, எஸ். சிவரட்ணம், அம்புலன்ஸ் சாரதி திரு. வை. சண்முகலிங்கம் மற்றும் மருத்துவமனையின் துடிப்பான சிறந்த ஊழியர்களான திரு. பீற்றர், எம். திரு. துரைராஜா போன்ற பலர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவர்களுடன் இராணுவ நடவடிக்கையினால் காயப்பட்ட நோயாளிகளும், பயத்தினால் தஞ்சம் புகுந்த உறவினர்களும் சேர்த்தே கொல்லப்பட்டனர்.

மொத்தத்தில் இரண்டு மருத்துவர்கள்—

பிரதமதாதி உட்பட மூன்று தாதிகள்—

இரண்டு மேற்பார்வையாளர்கள் —

பதினேழு மருத்துவமனை ஊழியர்கள் சகிதம் நோயாளர்கள் அவர்களது உறவினர்களான மொத்தம் அறுபத்தி எட்டுப்பேர் மருத்துவமனை வளவினுள்ளேயே கொல்லப்பட்டனர்.

அன்றைய இரவு பூராவும் இராணுவம் அங்கேயே நிலை கொண்டிருந்தது.

காயப்பட்டவர்கள் உதவி கேட்டு அவலக் குரல் எழுப்பிய போதெல்லாம் துப்பாக்கி வேட்டுக்களே பதில் கூறின.

தாகத்தினால் தண்ணீர் கேட்ட குழந்தைகள், காயப்பட்டவர்கள், வயோதிபர்களுக்குக் கூட அதேகதிதான்.

முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டாலே உயிர்காப்பாற்றப் பட்டிருக்கக் கூடிய நிலையிலிருந்த பலர் சிகிச்சை மறுக்கப்பட்ட நிலையில் உயிர் துறந்தனர்.

சத்தம், முனகல், அசைவு, அபயக்குரல் எழுப்பிய போதெல்லாம் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டதால் ஒரு குழந்தை சிறு பிள்ளைகள் உட்பட பலர் இறக்கவும்நேரிட்டது.

மாரடைப்பு ஏற்பட்டு சிவபுராணம் பாடியவாறே ஒரு வயோதிபரும் இறந்தார்.

**22 — 10 — 1987**

முதல் நாள் தனது கடமைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றிருந்த குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் ஏ. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு அன்று நடந்த அவலம் தெரியாது.

அதிவிசேட சிகிச்சைப் பிரிவில் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்த தனது நோயாளியான குழந்தை ஒன்றைப் பார்க்க மருத்துவ மனையின் பின்புற வாசலினூடாக அவர் வந்தார். சம்பவங்களைக் கேள்விப்பட்டு தனது சக மருத்துவர்களையும், ஊழியர்களையும் காப்பாற்றுமுகமாக இராணுவத்தினருடன் கதைப்பதற்காக உள்ளே வந்தவர் காவலுக்கு நின்ற வனால் கொல்லப்பட்டார்.

அதன்பின்னர் மறுநாள் அனைவரினது உடல்களும் ஒன்றாகச் சேர்த்து மருத்துவமனையின் பின்புறத்தில் பிரேத அறைக்கு அருகாமையில் போட்டு தகனம் செய்யப்பட்டன.

**ஈடு செய்யப்படாத இழப்பு**

1983 ஆம் ஆண்டின் பின்னர் இங்கு ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையைச் சாட்டாக வைத்துக்கொண்டு டாக்டர்கள் சிலர் ஏனைய பிரதேசங்களுக்கும், பிறநாடுகளுக்கும் பறந்து கொண்டிருந்தவேளையில், மனம் தளராது சஞ்சலப்படாது, ஆசை

(4 ஆம் பக்கம் பார்க்க)

**டாக்டர். எஸ். பி. ஆர். சீர்மாறன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், நன்கு உக்கிய கோழி எரு விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9 றக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (33418)

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், கிணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

### காணவில்லை

அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாயை உடுவில் வீதி மானிப்பாயில் காணவில்லை. கண்டவர்கள் தயவுசெய்து உடுவில் வீதி, ஐயர் கடையில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (7674)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஐந்து நாட்கள் வளர்ச்சியடைந்த பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. குஞ்சு ஒன்று ரூபா 42/50 உடுவில் மகளிர் கல்லூரி முன், மல்வம் வீதியூடாக சிங்கம் லேன், உடுவில். (33434)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

ஆரம்பம் 22-10-94 சனிக்கிழமை, கடைசித் தகைமை க. பொ. த. (சா/தா) சனி, ஞாயிறு நேரில் கற்கமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7969)

### தட்டச்சு சேவை

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் ''தமிழ் மொழியில்'' சிறந்த முறையில் விரைவாக தட்டச்சு செய்து தரப்படும். தொடர்பு: M. ராஜன், இல. 70/6, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (33432)

### மணமக்களே!

உங்கள் திருமண அழைப்பிதழ்களை நீவிர் விரும்பும் டிசைன்களில் எண்ணம்போல் தெரிவு செய்திட உடன் வாரீர். ''ஆனந்த்ஸ்'' பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33366)

### இலவச சிகிச்சை

இலவச அக்குபஞ்சர் சிகிச்சை வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் தினமும் காலை 8-30—12-30 வரை சகல நோய்களுக்கும், இல. 35, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (33332)

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம் ஒக். 21

கிளிநொச்சி தர்மபுரத்தில் கடந்தவாரம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் அங்கு மரணமானார்.

தர்மபுரத்தைச் சேர்ந்த நாகநாதி நாகலிங்கம் (வயது 70) என்பவரே மரணமானவராவார்.

விபத்துக்குள்ளாகியதில் மரணமாகும் வரை சுயநினைவிழந்த நிலையிலேயே இவர் காணப்பட்டார். (ஐ-15)


## தபால்மூலம் கல்விச்சேவை

## ஆண்டு 3 முதல் AL வரை

(எல்லாப் பாடங்களும்)

வீட்டில் இருந்தபடியே ஒவ்வொரு மாணவரும் இப்பயிற்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் தமது கல்வித்தரத்தை வளர்த்துக்கொள்ள

**புதிய முயற்சி**

பயிற்சி வினாத்தாள்களை வாங்கி வீட்டிலிருந்தே விடையளித்து, விடைத்தாள்களை 1ரூபா முத்திரையுடன் எமக்கு அனுப்பி வைத்தால், திருத்தப்பட்டு உங்கள் சுய விலாசத்திற்கே அனுப்பி வைக்கப்படும். உங்கள் வசதிக்காக குடாநாட்டில் எல்லாப் பாகங்களிலும் வினாத்தாள்களை வாங்கக்கூடியதாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வினாத்தாள்களை வாங்கும் போது அவற்றுடன் ''நேர்மையாக விடையளிப்பதை உறுதிப்படுத்தும் பத்திரத்தையும்'' கேட்டு வாங்கிக் கொள்ளவும். விடைத்தாள்களை எமக்கு அனுப்பும் பொழுது அதனுடன் உறுதிப்பத்திரத்தையும் அனுப்பி வைத்தால் மட்டுமே விடைத்தாள்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

(விடைத்தாள் திருத்துதல் + உறுதிப்படுத்தும் பத்திரம் ஆகியவற்றிற்கு எதுவித கட்டணமும் இல்லை.)

ஒவ்வொரு மாதத்தின்

- ✶ முதலாவது ஞாயிறுகளில் ஆண்டு 3, 4, 5, 6, 7, 8 9, 10, O/L
- ✶ 2 ஆவது, 3 ஆவது ஞாயிறுகளில் ஆண்டு 5 புலமைப் பரிசில்
- ✶ ஒவ்வொரு வெள்ளியும் A/L

பரீட்சைகளுக்காக, பயிற்சி வினாத்தாள்கள் எம்மால் வெளியிடப்படுகின்றன.

மாணவர்களின் வசதிக்காக பயிற்சி வினாத்தாள்களை பின்வரும் புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

- ★ யாழ்ப்பாணம் — BOND புத்தக நிறுவனம்
- ★ சுன்னாகம் — துர்க்கா புத்தக நிறுவனம்
- ★ நெல்லியடி — சிதம்பரப்பிள்ளை புத்தக நிறுவனம்
- ★ பருத்தித்துறை — கமலா புத்தக நிறுவனம்
- ★ சாவகச்சேரி — ஆசீர்வாதம் புத்தக நிறுவனம்
- ★ கொடிகாமம் — அருள்நாயகி புத்தக நிறுவனம்
- ★ பளை — செல்லையா புத்தக நிறுவனம்

மேலதிக விபரங்களுக்கு:

**BOND புத்தக நிறுவனம்**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(7973)


# சிறுவரின் திறமைகளை வளர்ப்பதில் ஆரம்ப ஆசிரியர் பங்கு முக்கியம்

## இந்து மகளிர் பரிசளிப்பு விழாவில் உரை

''சிறாரின் திறமைகளை கண்டறிந்து வளர்த்து அறிவும் ஆளுமையும் நிறைந்தவர்களாக அவர்களை சமுதாயத்திடம் ஒப்படைக்கும் பணியில் ஆரம்ப ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது.''

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய யாழ். நல்லூர் பிரதி கல்வி பணிப்பாளர் திரு. சி. புலந்திரன் இவ்வாறு கூறினார்.

இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை அதிபர் திருமதி யோ. விக்னேஸ்வரா தலைமையில் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் விழா கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது.

திரு. புலந்திரன் மேலும் பேசும் போது கூறியதாவது:

பெற்றோராயினும் சரி ஆசிரியர்களாயினும் சரி புலமைப் பரிசில் பெறும் மாணவர் மட்டுமே சிறந்தவர்கள் என்று கருதக்கூடாது. ஆற்றல் திறமை போன்றவைகளையும் மாணவன் பெற்றிருந்தால் அதுவே சிறப்பு என்பதையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும் என்றார்.

தமிழீழமாணவர் அமைப்பின் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி ம. வாசுகி, திரு. வி. தானையா, திரு. சி. தியாகராசா, இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா ஆகியோரும் பேசினார்கள்.

மாணவியருக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் திரு. புலந்திரன் வழங்கினார்.

மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-111)

# மாணவர் ஆற்றலை இனங்கண்டு நன்னிலைப்படுத்துவது அவசியம்

## யாழ். இந்து அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஒக். 21

''மாணவர்களின் ஆற்றலைஇனங்கண்டு நல்ல வழிகாட்டல் மூலம் நன்னிலைப் படுத்தல் வேண்டும்.''

யாழ். இந்துக்கல்லூரி ஆண்டு 11B மாணவர்களின் சுரபி சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

விழா செல்வன் சி.சிறீதரன் தலைமையில் குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

அதிபர் பஞ்சலிங்கம்மேலும் கூறியதாவது:-

எமது கல்லூரியின்சுயமான, சுதந்திரமான பார்வையைப் புலப்படுத்தும் வகையில் வெளிவந்துள்ள ''சுரபி''மாணவர்களின் வளர்ச்சிக்கான உந்துசக்தியாகும். சுரபியின் வளர்ச்சிக்கு மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோரும் பழைய மாணவர்களும் ஊக்கம் தந்துள்ளமை தமது கல்லூரியில் அவர்கள் கொண்டிருக்கும் பற்றுதலையும் மதிப்பையும் காட்டுகிறது. — என்றார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக அரச அதிபரும் யாழ் இலக்கிய வட்டத்தலைவருமான திரு. து. வைத்திலிங்கம் பேசும் போது கூறியதாவது:

''சுரபி'' சிறந்த இலக்கிய கர்த்தாக்களையும் பத்திரிகையாளர்களையும் உருவாக்கக் கூடியதாக செயல்பட வேண்டும். சிறுவயதிலேயே நல்ல ஆக்கங்களை படைக்கும் ஆற்றலை மாணவர்கள் பெற ''சுரபி'' வழியமைக்க வேண்டும். மறைந்த மேதை கைலாசபதி உட்பட பிரபல இலக்கிய கர்த்தாக்களைத் தந்த இந்துக்கல்லூரி மென்மேலும் பெருமைகளை இந்த மண்ணிற்கு வழங்க வேண்டும். — இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

நூலின் முதல் பிரதியை திரு. வைத்திலிங்கத்திடம் இருந்து வைத்திய கலாநிதி ஆர். சிர்மாறன் பெற்றுக் கொண்டார்.

திரு. திருமதி வைத்திலிங்கம் கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்கள்.

திருவாளர்கள் அராலியூர் சுந்தரம்பிள்ளை, ஐ. கமலநாதன் க. பேரானந்தம், செல்வன் கு. உபேந்திரன், க கதிர்காமர், கு. விஜயகுமார் ஆகியோரும் பேசினார்கள். (க-111)


## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 95 DAY CLASS**

பிரிவு - 2

| ஆசிரியர் | பாடம் | நேரம் |
| --- | --- | --- |
| சௌந்தி | கணக்கியல் | 8-00 — 9-30 |
| பசில் | வர்த்தகம் | 9-30 — 11-00 |
| வரதராஜன் | பொருளியல் | 11-00 — 12-30 |

- ★ வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.
- ★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

ஆரம்பம்: **25 - 10 - 1994** செவ்வாய் 8 a. m.

[சி-9412]


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 05 — 1941

மறைவு: 21 — 09 — 1994

### யோசவ் பெர்னாண்டோ

எத்தனையோ ஆண்டுகளை உந்தன் - கண்மணிகளுக்காய்
சிக்கனத் கோடிருந்து செலவழித்தாய் வெளிநாட்டில்
அத்தனைக்கும் ஈடாகக் கொண்டு வந்த - செல்வமெல்லாம்
அனுபவிக்க முடியாது ஐயா நீ! சென்றதெங்கே?
பிரான்ஸ் நாட்டு நிபுணன் உன்னை ஓடிச் சென்று - ஓய்வெடென்றான்
பிந்தி அங்கு நிற்காது முந்தியே ஓடி வந்தாய்
சொந்த மனைவி மக்கள் சுற்றமும் சூழ்ந்து உன்னை
நித்தமும் காண வர நீ எங்கே சென்று விட்டாய்
சொல்லி வைத்த நாளினிலே தொல்லை பல - அனுபவித்து
அல்லலுற எம்மை விட்டு அன்பனே நீ சென்றதெங்கே
அன்னாரின் பிரிவு நாளில் பங்கேற்ற யாவருக்கும்
அனுதாபம் அனுப்பி வைத்த அனைவருக்கும் நன்றி - இங்கே

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்.

பாஷையூர். (33421)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நவம்பர் 15ஆம் திகதி இணையக் காரியாலயத்தில் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது. இணையத்தில் கண்காட்சியில் அங்கத்துவம் பெற்றிருக்கும் 16 அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்குபற்றவுள்ளன. (க)

## பீ. ஜீ - 300 ரக நெல்விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 21

பரந்தன் விவசாய திணைக்களத்தில் இருந்து பீ.ஜீ-300 இனத்தைச்சேர்ந்த 200 புசல் நெல் எடுத்துவரப்பட்டு குடாநாட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் த. சிவலோகநாதன் இவ்வாறு தெரிவித்தார். (க-17)

## வாழைப்பழம் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக்.21

குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு கிலோ கதலி வாழைப்பழம் சந்தைகளில் 10 ரூபாவுக்கு விற்கப்படுகின்றன. (க-17)

### ஈழத் தமிழ்....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கழகங்களை, தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிப்பதற்கு இங்கிலாந்தில் வாய்ப்புகள் அதிகம். அதனால் பிரயோசனம் இல்லை, அது போகட்டும் என்று பணம் சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். ஊருக்குப் பணத்துடன் திரும்பி வந்தால் போதும் என்பது தான் எண்ணம். முறையாகத் தொழில் நுட்பத்தைப் படித்துக் கொண்டு ஊர் திரும்பினால், அது நாட்டுக்கும் வீட்டுக்கும் உதவும் என்பதைப் பற்றி அவர்களுக்கு இம்மியளவும் யோசனை இல்லை.

### வரலாற்றில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தைகளில் எடுபடாமல், தொடர்ந்து யாழ். போதனா மருத்துவமனையில் குழந்தை வைத்திய நிபுணராக பணிபுரிந்தவர் டாக்டர் ஏ. சிவபாதசுந்தரம்.

எவரையும் வெட்கித்தலைகுனிய வைக்கும் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைப் படுகொலைகள் வரலாற்றிலே கறை படிந்த அத்தியாயங்களாகி விட்டன. (இ)


யாழ்ப்பாணம் அரசினர் பொது (போதனா) வைத்தியசாலை

## ஏல விற்பனை
## பாவித்த பொருள்கள்

பாவித்த வாகனப் பற்றறிகள், ரயர்கள், குளிர் சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள், அலுமினியப் பாத்திரங்கள் முதலியன 28-10-94 வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு இவ்வைத்தியசாலை வளவினுள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இப் பொருட்களை பார்வையிட விரும்புவோர் அவற்றை ஏல விற்பனைத் தினத்திற்கு முதல் நாள் மு. ப. 10-00 மணியிலிருந்து ந. ப. 12-00மணிவரை பார்வையிடலாம்.

சித்திபெறும் கேள்வியாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே எடுத்துச் செல்ல வேண்டும்.

வைத்திய கலாநிதி
(செல்வி) நவமலர் கனகரத்தினம்.
பணிப்பாளர்.

20-10-1994 [சி/9515]



உ

உருத்திரபுரம்
அருள்மிகு
ஸ்ரீமாணிக்க விநாயகர் தேவஸ்தானம்

## கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின நவோத்தர சகஸ்ர (1009) மகா சங்காபிஷேகம்

மஹா சங்காபிஷேக பூர்வாங்க கிரியைகள் யாவும் இன்று **21 - 10 - 94** வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பித்து **22 - 10 - 94** சனிக்கிழமை காலை 11 மணியளவில் மகா சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

மகா சங்காபிஷேக பிரதமகுரு
'வேதாகமாமணி, சிவபூஜாநிதி''
சிவஸ்ரீ. பால. வைத்தியநாத சிவாச்சாரியார்
(ஊரெழு)

— ஆலய பரிபாலன சபை.

(33406)


## 7ஆவது ஆண்டு நினைவஞ்சலி

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21,22 ஆம் திகதிகளில் இந்திய இராணுவ நடவடிக்கையால் யாழ். பொது வைத்தியசாலையில் கடமையின் போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலிகள்

01. வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
02. வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
03. வைத்திய கலாநிதி கே. கணேசரத்தினம்
04. திருமதி பா. வடிவேலு
05. செல்வி லீலாவதி முத்தையா
06. செல்வி மங்கையர்க்கரசி இராமநாதன்
07 திரு. கே. செல்வராஜா
08. திரு. கே. கிருஷ்ணராசா
09. திரு. மு. துரைராஜா
10. திரு. வி. சண்முகலிங்கம்
11. திரு. வி. வரதராசன்
12. திரு. கே. வேதாரண்யம்
13. திரு. ஜோன். பீற்றர்
14. திரு. இ. சுகுமார்
15. திரு. க. சிவலோகநாதன்
16. திரு. எஸ். ஜெகநாதன்
17. திரு. கே சிவராசா
18. திரு. கோ. உருத்திரன்
19. திரு. க. மார்க்கண்டு
20. திரு. இ. இரத்தினராசா
21. திரு. க. நவரத்தினம்

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
19 - 10 - 1994 [சி-9414]

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 02 — 1911

மலர்வு: 21 — 10 — 1988

### அமரர் வீ. அப்பாத்துரை

''இறைவன் அருகில் அமர்ந்திர் போற்றி''

உமது நினைவில் இருக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,

தபால்கட்டைசந்தி,
188, கண்டி வீதி,
அரியாலை. (33423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## உடம்பெல்லாம் நோவது ஏன்?

உண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் நோகிறது. ஸ்ரீலங்காவின் அரசாங்கப் படைகளுக்கு!

உண்மையைச் சொன்னவர் நாட்டின் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா. எனினும் அந்த உண்மையை படைத்தளபதிகள் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளால் சீரணிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் சீற்றம் அடைந்திருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இத்தனைக்கும் பிரதமர் சந்திரிகா ஒன்றையும் புதிதாகச் சொல்லவில்லை. ஏற்கனவே தெரிந்த விடயங்களைத் தான் கூறினார். இது அவருக்கு மட்டும் தெரிந்த உண்மைகள் அல்ல. அரசியல்வாதிகள் உட்பட மக்களுக்கும் தெரிந்தவையே.

முந்திய ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தைவிட இராணுவமே மேலோங்கி நின்றது மக்களுக்குத் தெரியாதா? இனப்பிரச்சினை விவகாரத்தில் இராணுவம் நினைத்தது போலவே, அதனை அனுசரித்தே அரசாங்கம் நடந்து கொண்டது யாருக்கும் தெரியாதா?

அரசாங்கத்துக்குச் சமாந்தரமாக இராணுவம் செயற்பட்டதும், பல சந்தர்ப்பங்களில் இராணுவமே அரசுக்கு ''உத்தரவிட்டு'' நடத்தியதும் தெரியாதா? போரில் தங்களால் வெல்ல முடியும் என்று அரசாங்கத் தலைமைப் பீடத்தினருக்கு நம்பிக்கையூட்டி, அவர்களை அரசியல் தீர்வை நாடாமற் செய்யத் தூண்டியவர்கள் இராணுவத்தினர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

முந்திய அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளாக இருந்தது போல, தோளுக்கு மிஞ்சிய ''தோழனாக'' நின்று சந்திரிகா அரசாங்கத்தில் இராணுவம் செயற்பட முடியாது என்பதனைப் பிரதமர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். ஏனைய நாடுகளைப் போல, அரசாங்கத்துக்கு அடங்கிய இராணுவமாகவே இனிமேல் செயற்பட நேரிடும் என்பதனை நினைக்க படை உயர் அதிகாரிகளால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை! அதன் வெளிப்பாடே சீற்றமும், மனப் புகைச்சலும்.

அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில், பிரதமர் தமது கொள்கைகளை உரிய விதத்தில் செயற்படுத்தும் உரிமை உண்டு. அதற்கு உதவுவது தான் இராணுவத்தின் கடமை. அவ்வாறு நோக்கும் போது பிரதமர் இராணுவத்தை கடுமையாக விமர்சித்ததில் தப்பில்லை.

ஆனால் சந்திரிகாவின் இந்தத் துணிச்சலை, இராணுவத்தின் உயர் அதிகாரிகள் விரும்பவில்லை. அதனால் அவர் மீது சீற்றம் காட்டியிருக்கின்றனர். சந்திரிகா ஜனாதிபதியாகி விட்டால், படையினரின் இந்தச் சீற்றம் எல்லாம் தானாகவே தணிந்து விடும். வேண்டுமானால் அதற்கு முதல் எதிர்வரும் இருபது நாள்களிலும் அவர்கள் வஞ்சம் தீர்க்க முயலலாம்.

இராணுவத்தினரின் இந்த மனப் புகைச்சலை காமினி திஸநாயக்காவும், ஐ.தே.கவினரும் பயன்படுத்தி சந்திரிகாவுக்குக் குழி பறிக்க முயலலாம் என்பதும் சாத்தியமே. இராணுவத்தைப் பற்றிய உண்மைகளைக் கூறியதும், பிரதமர் நெருப்புடன் விளையாடுவதாகக் காமினி திஸநாயக்கா கொதிக்கிறார்!

இராணுவத் தீர்வை நாடிய (இப்போதும் நாடும்) கட்சிக்காரருக்கு பிரதமர் கூறியது குறித்துக் கோபம் வருவது இயற்கை தான்! அவர்களின் அரசியல் வாழ்வு இராணுவத்தை நம்பியல்லவா இருந்தது?! இராணுவத்தை விமர்சிப்பது — உண்மையைச் சொல்வது — அவர்களை, ஐ.தே.கட்சியினரைச் சாடுவதற்குச் சமம். ஆகையால் காமினி துள்ளிக் குதிப்பதில் புதுமை ஒன்றுமில்லை.

மேலும் அவ்வாறு இராணுவத்தின் பக்கம் நின்றால் தானே, ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் வாக்குகளைத் தேடிக் கொள்ளலாம்.

உண்மைக்கு அழிவில்லை. அதன் பக்கம் நிற்பவருக்கு தர்மம் உதவும். ஆகையால் சந்திரிகா சஞ்சலப்பட எதுவுமில்லை.

# காமினி, 6 முன்னாள் அமைச்சர்கள் கிரிமினல் குற்ற வலையில் சிக்குவர்?

## சிங்கள இதழ் 'ஹிரு' தகவல்

கொழும்பு, ஒக். 21

எதிர்க்கட்சித் தலைவரான காமினி திஸாநாயக்க, முன்னாள் அமைச்சர்களான நந்தா மத்தியு, சந்திரா பண்டார, ஏ.ஸி.எஸ். ஹமீத், சிறிசேன கூரே, பெஸ்டஸ் பெரேரா, ராஜித சேனரத்ன ஆகியோர் மீது லஞ்ச ஊழல், கொலைகள் தொடர்பாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை நிரூபிக்கக் கூடிய சாட்சியங்கள் உண்டென்றும் —

அவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் மிகவும் தெளிவாக உள்ளன என்றும் 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிங்கள வார இதழான ''ஹிரு'' இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:

தற்போதுள்ள நிலைமைகளின்படி, காமினி திஸநாயக்க விற்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து அவர் தப்புவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஏ.ஸி.எஸ். ஹமீத் வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரிந்த போது கொரியாவிலிருந்து கிடைத்த 10 கோடி ரூபா நிதி உதவியை செலவிட்ட விதம் குறித்தும் மேலும் பல குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் குற்றவாளியாகக்கூடுமெனவும் —

எம்பிலிப்பிட்டியாவில் பாடசாலை மாணவர்கள் 32 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக நந்தாமத்தியு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவுள்ளதாகவும் —

உத்தியோகப்பற்றற்ற இராணுவ அணியைப் பயன்படுத்தி தனது எதிரிகள் பலரைக் கொன்றதாக பெஸ்டஸ் பெரேரா, ராஜித சேனரத்ன ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் கலவரம், பீதி அடைந்துள்ளதாகவும் —

தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான தகவல்களை வழங்குவோரைக் கண்டறிந்து அவர்களின் முயற்சிகளை தடுப்பதற்குத் திட்டங்கள் தீட்டி வருகின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாரத்தில் இருந்த போது தமக்கு எதிரான குற்றச் சாட்டுகளை மூடி மறைக்க தமது அரச அதிகாரத்தைப் பயன்படுத்திய இவர்கள் —

இப்போது இதற்கு மரணப் படையை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

காமினி திஸாநாயக்காவை கட்சித் தலைவர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு சிறந்தவழி, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை நிரூபிக்கக்கூடிய தகவல்களை இரகசியமாக அரசுக்கு வழங்குவது என காமினிக்கு எதிராக ஐ.தே.கவில் இயங்கும் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இந் நிலையில் கட்சித் தலைவராக காமினியால் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாதெனக் கருதப்படுகிறது.

## ஜனாதிபதித் தேர்தலில்

# சந்திரிகாவின் வெற்றி காலத்தின் தேவை

### வாசுதேவ கூறுகிறார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா வெற்றி பெறுவது காலத்தின் தேவையாகும்.

இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.முவின் எம்.பி.வாசுதேவ நாணயக்கார முன்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை— நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்னா கருத்து வெளியிடுகையில்—

ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸநாயக்கா தோற்கடிக்கப்பட வேண்டும். ஆயினும் சந்திரிகாவுக்கு வாக்களிக்கும்படி மக்களை நாம் கேட்கமுடியாது—'என்று தெரிவித்தார். (எ-6)

# முன்னணி அரசுடன் மோத நாம் முட்டாள்களல்லர்

### அமைச்சர் அஷ்ரப் பேச்சு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் மோதுவதற்கு நாம் முட்டாள்கள் அல்லர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ஜனாப் எம்.எச்.எம். அஷ்ரப் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''முஸ்லிம் சமய விவகாரத்துக்கென தனி அமைச்சை உருவாக்க நாம் கோரவில்லை. முஸ்லிம் விவகாரத் திணைக்களத்தை எனது அமைச்சின் கீழ் கொண்டு வரும்படியே நான் அரசாங்கத்தைக் கேட்டேன். முஸ்லிம் விவகாரத்துக்கு தனி அமைச்சை நான் கோருவதாக ஐக்கிய தேசியக் கட்சிதான் பிரசாரஞ் செய்து வருகின்றது'' என்று ஜனாப் அஷ்ரப் கம்பளையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார். (எ-6)

# மலேரியா ஒழிப்பு பற்றி விசேட பயிற்சி வகுப்பு

### சுகாதாரப்பகுதி நடத்துகிறது

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். குடாநாட்டில் மலேரியா பரவும் இடங்களில் மலேரியா நுளம்புக் குடம்பிகளை இனங்கண்டு அழிப்பதற்கு பொது சுகாதார வெளிக்கள உதவியாளர்களுக்கு விசேட பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'எபேற்' எனப்படும் நுளம்புக் குடம்பி அழிப்பு மருந்தின் மூலம் எவ்வாறு நீர்தேக்கங்களில் மலேரியா நுளம்புக் குடம்பிகளை இனங்கண்டு அழிப்பது என்பது பற்றியே இவர்களுக்கு பயிற்சியளிக்கப் படுகிறது.

கெற்பலி, வரணி குடமியன் பகுதிகளில் முதல் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் விசேட பயிற்சி வகுப்பு யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக வட பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தின் மலேரியா தடுப்புப் பகுதி அத்தியட்சகர் வைத்திய கலாநிதி. கே. சிவகுரு தெரிவித்தார். (எ-4)

# வெள்ளி ஆண்டில் வெள்ளைப்பிரம்பு

*சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. அதனையொட்டி உடுவிலில் உள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் வெளியிட்டுள்ள செய்தி இது.*

உலகம் முழுவதுமுள்ள விழிப்புல வலுவிழந்தவர்களுக்குஇவ்வாரம் ஓர்உன்னத நாளாகும். வீடுகளில் முடங்கி விடாது வெளியுலகுடன் எம்மை இணைத்து நிற்கும் வெள்ளைப் பிரம்பிற்கு இவ்வேளை சர்வதேச ரீதியாக விழா எடுக்கிறார்கள். இந்தச் சர்வதேச தினத்தில் விழிப்புல வலுவிழந்தவர்களாகிய நாங்களும் எங்கள் இருப்பை உலகத்திற்கு உறுதிப்படுத்திக் கொள்வோம்.

வெள்ளைப்பிரம்பு பார்வையற்றவர்களுக்கு ஒரு பாதுகாப்பு. அது அவர்களை அடையாளப்படுத்தும் சின்னம். சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இப்போது25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஒரு வகையில் இவ்வாண்டு வெள்ளைப் பிரம்பிற்கு ஒரு வெள்ளியாண்டு. இவ்வேளையில் இதை அறிமுகப்படுத்திய அமெரிக்க அரிமாக் கழகத்தை (Lions Club) நாம் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

எனவே வரலாற்று புனிதமிக்க இந்த உன்னதமான நாளிலே விழிப்புல வலுவிழந்தவர்களாகிய நாங்கள் ஒரு சபதம் எடுத்து கொள்வோம். பார்வையற்றோராகிய நாங்கள் பூமிப்பந்தைச் சுற்றி எங்கள் கைகளை கோத்துக் கொள்வோம். ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறிக் கொள்வோம்.

கூட்டுப் புழுக்களாக அறைக்குள் முடங்கிக் கிடந்த நாங்கள், வண்ணத்துப் பூச்சிகளாக சிறகை விரித்துக் கொள்வோம். எங்களுடைய இலட்சியப் பாதையை நாங்களே செப்பனிட்டுக் கொள்வோம். வெள்ளைப் பிரம்பு எங்களுக்கு வழிகாட்டட்டும்.

புராணங்களைப் புரட்டிப் பார்க்கிறோம். சந்தர்ப்ப வசத்தால் பார்வையிழந்த சுந்தரர்களையும் திருதராஷ்டிரர்களையும் ஏன் எங்கள் சரித்திர மூதாதைகளான யாழ் பாடிகளையும் கூட சந்திக்கின்றோம். மேற்குலகை திரும்பிப் பார்க்கிறோம். ஹெலன் கெல்லர்களும், தெளலத்களும், மாபெரும் கவிஞரான ஜோன் மில்ரன்களும் எங்களுக்கு தென்படுகிறார்கள்.

எங்கள் தமிழீழத்தில் மட்டும் ஏன் இவர்களது ஆற்றல் வெளிவரவில்லை என்ற கேள்வி இன்று காலாவதியாகி விட்டது. தமிழீழமும் சத்தம் போடாமல் சில சாதனையாளர்களை [illegible] கொண்டுதான் இருக்கிறது. வாழ்வகம் [illegible] சான்று. ★

## புலிகளின் குரல் வானொலியில்

**21 — 10 — 1994**

**வெள்ளி இரவு**

- ★ 8-01 — லெப்ரினன்ட் கேணல் சந்தோசம் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — தேசிகன் எழுதிய ''சந்ததி மறவாத சந்தோசம்''
- ★ 8-20 — அனைத்துலக விவசாயிகள் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''பேரினவாத யானை வருகிறது பின்னே, அதன் மணியோசை வருகிறது முன்னே''
- ★ 8-50 — வாத்தியகானங்கள்

**22 — 10 — 1994**

**சனி காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## சர்வதேச அவதானிகள் வருகை

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கவரும் சர்வதேச அவதானிகள் குழுவில் 20 — 25க்கு இடைப்பட்ட பிரதிநிதிகள் இருப்பர் என்றும் —

இவர்கள் அடுத்த இரு வாரங்களில் கொழும்பு வந்து சேர்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-6)

## புதிய உணவு முத்திரைகள் விநியோகம்

இடம் பெயர்ந்தவர்களுக்கான செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான புதிய உலர் உணவு முத்திரைகள் யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதியினால் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

செப்டெம்பர் மாதத்திற்கான உலர் உணவு விநியோகம் புதிய முத்திரைகள் மூலமே வழங்கப்படும். இம்மாதத்திற்கான உலர் உணவுப் பொருள்கள் தற்போது யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் செப் [illegible] உலர் உணவுப் பொருள்கள் வழங்க [illegible] கப்பட்டது. (ஐ-4)

# 1995 ஆம் ஆண்டுக்கான விடுமுறை நாட்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21

தமிழீழத்தில் விடுமுறை நாட்கள் தொடர்பான பிரகடனம் தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் நாட்காட்டி வெளியிடும் சகல நிறுவனங்களும் 1995 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியில் கீழ்வரும் நாட்களை மட்டுமே விடுமுறை நாட்களாக வெளியிடுமாறு நிர்வாகசேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

நிர்வாக சேவைப் பகுதியினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள விடுமுறை நாட்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ★ | ஜனவரி | 15 ஞாயிறு | — தைப்பொங்கல் |
| ★ | பெப்ரவரி | 27 திங்கள் | — மகாசிவராத்திரி |
| ★ | மார்ச் | 03 வெள்ளி | — றம்ழான் |
| ★ | ஏப்பிரல் | 14 வெள்ளி | — பெரிய வெள்ளி |
| ★ | ஏப்பிரல் | 14 வெள்ளி | — புதுவருடப் பிறப்பு |
| ★ | ஏப்பிரல் | 15 சனி | — சித்திரைப் பௌர்ணமி |
| ★ | ஏப்பிரல் | 19 புதன் | — அன்னை பூபதி நினைவு நாள் |
| ★ | மே | 01 திங்கள் | — மேதினம் |
| ★ | மே | 10 புதன் | — ஹஜ்ஜிப் பெருநாள் |
| ★ | ஜூன் | 30 வெள்ளி | — விசேட வங்கி விடுமுறை |
| ★ | ஜூலை | 05 புதன் | — கரும்புலிகள் நாள் |
| ★ | ஜூலை | 27 வியாழன் | — ஆடி அமாவாசை |
| ★ | செப்ரம்பர் | 26 செவ்வாய் | — தியாகி திலீபன் நினைவு நாள் |
| ★ | ஒக்ரோபர் | 10 செவ்வாய் | — மாலதி நினைவு நாள் |
| ★ | நவம்பர் | 06 திங்கள் | — தீபாவளி |
| ★ | நவம்பர் | 27 திங்கள் | — மாவீரர் நாள் |
| ★ | டிசம்பர் | 25 திங்கள் | — நத்தார் |
| ★ | டிசம்பர் | 31 ஞாயிறு | — விசேட வங்கி விடுமுறை |

## பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போது

# காணாமற் போன படையினர் பற்றி புலிகளிடம் கேட்குமாறு வற்புறுத்து!

### படை உயரதிகாரிகள் அரசுக்கு நெருக்குதல்

கொழும்பு, ஒக். 21

விடுதலைப் புலிகள் பூநகரி முகாம் மீது கடந்த ஆண்டு நடத்திய தாக்குதலின்போது காணாமற்போன நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர், மற்றும் கடற்படையினர் பற்றிய விவரங்களை இரண்டாம் கட்டப் பேச்சின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து பெற்றுக் கொள்ளுமாறுபடை உயரதிகாரிகள் அரசிடம் வற்புறுத்திக் கேட்டிருப்பதாக ''திவயின'' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

படையினர் பலர் விடுதலைப் புலிகள் வசம் கைதிகளாக உள்ளமை உத்தியோக பூர்வமற்ற முறையில் தமக்குத் தெரியவந்துள்ளதாகவும் —

அவர்கள் இன்னமும் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனரா அல்லது கொல்லப்பட்டு விட்டனரா என்பதை பேச்சின்போது விடுதலைப் புலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது அவசியம் என்றும் பாதுகாப்பு துறையினர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## யாழ். மாநகரசபைப் பகுதியில்

# வீதி மின் இணைப்புகள் திருத்தப்படுகின்றன

யாழ். மாநகரசபைப் பகுதிக்கு உட்பட்ட வீதிகளில் உள்ள மின் இணைப்புகளை சீர் செய்யும் பணியில் மாநகர சபை ஊழியர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

மாநகர சபையின் கையிருப்பில் உள்ள உபகரணங்களைக் கொண்டு வீதிகளில் அறுந்து காணப்படும் மின் கம்பிகள் மற்றும் மின் இணைப்பு கருவிகள் திருத்தப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் புதிதாக மின் கம்பங்களும் நடப்படுகின்றன.

இதேவேளை வீதியோரங்களில் மின் இணைப்புகளுக்கு இடையூறாக உள்ள மரங்கள் செடி கொடிகள் என்பனவும் வெட்டி அகற்றப்படுகின்றன. (ஐ-17)

# பிரிட்டிஷ் அரசின் எக்ஸ்றே கருவியை ஆஸ்பத்திரியில் இயக்கமுடியாதநிலை!

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நவீன எக்ஸ்றே கருவிகளை யாழ். ஆஸ்பத்திரியில் இயங்க வைக்க முடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த எக்ஸ்றே கருவிகள் இயங்கத் தேவையான மின் சாரத்தை வழங்கக் கூடிய மின் பிறப்பாக்கிகள் யாழ். ஆஸ்பத்திரியில் இல்லாததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பல்வேறு முட்டுக்கட்டைகளால் பலமாதங்கள் கொழும்பிலும், துறைமுகக் களஞ்சியத்திலும் தேங்கிக் கிடந்த பிரிட்டிஷ் அரசின் மருத்துவ உபகரணத் தொகுதிகள் அண்மையில் தான் யாழ். ஆஸ்பத்திரிக்கு முழுவதுமாக வந்து சேர்ந்தன. அவற்றில் இந்த எக்ஸ்றே கருவியும் ஒன்றாகும்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்கனவே இருந்த எக்ஸ்றே கருவியும் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக கடந்த 90 ஆம் ஆண்டு முதல் சீராக இயங்க முடியாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் —

நவீன எக்ஸ்றே இயந்திரத் தொகுதி ஒன்று அன்பளிப்பாகக் கிடைத்தும் அதன் சேவையை நோயாளிகள் பெறமுடியாதிருப்பது குறித்துப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை —

யாழ். ஆஸ்பத்திரி எக்ஸ்றே பிரிவில் நீண்ட நாளாக நிலவி வரும் தொழில்நுட்ப வியலாளர் பற்றாக்குறை காரணமாக எக்ஸ்றே பிரிவு அடிக்கடி ஸ்தம்பித நிலையை அடைய வேண்டிய நிலைமையும் நீடிக்கிறது.

மொத்தமாகப் 14 தொழில் நுட்ப வியலாளர்கள் கடமை புரிய வேண்டிய எக்ஸ்றே பிரிவில் தற்சமயம் இரண்டு நிரந்தர தொழில் நுட்பவியலாளரும், மேலதிக கட்டாய சேவையாக நான்கு தொழில் நுட்ப வியலாளருமாக மொத்தம் 6 பேர் மட்டுமே கடமை புரிகின்றனர்.

கடந்த பல வருடங்களாக இருந்து வரும் இந்த தொழில் நுட்பவியலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யயும். ஆஸ்பத்திரி நிர்வாகம் பல தடவைகள் முயற்சித்த போதிலும் பயன் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-15)

## மாற்றம் சஞ்சிகை

யாழ்ப்பாணம், ஒக். 21

தமிழ்த்தாய் மன்றத்தின் ''மாற்றம்'' வெளியீடான சஞ்சிகை வெளிவந்துள்ளது. வழமையான அம்சங்களுடன் மலிவு விலைப் பதிப்பாக அது இம்முறை வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## பாடசாலைகளில்

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளி பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு.சி. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம்-1 கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-17)

★ ★ ★

யாழ். இந்துக் கல்லூரியின் பரிசுத்தினம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய் முற்பகல் 10மணிக்கு நடைபெறும். முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் கலந்து கொள்வார்.

# சந்திரிகாவின் கூட்டத்தில் சந்தேக நபர் ஒருவர் கைது

கடந்த திங்களன்று மத்துகமவில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரை பிரசமரின் பாதுகாப்புப் பிரிவினரும், பொலீஸாரும் விசாரணை செய்து வருவதாக 'திவயின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் கொழும்பில் வசிக்கும் கிருஷ்ணன் [வயது 32] என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-9]

## நாளை

யாழ். மாவட்ட கூட்டுறவு பிரதிநிதிகளை மக்கள் வங்கியின் பொதுச்சபைக்கு தெரிவு செய்வது தொடர்பான கூட்டம் நாளை (சனி) முற்பகல் 10 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கியின் பிரதேச தலைமைக் காரியாலயத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. க.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

**இயற்கையே எம் மூலதனம், அதைஇழந்தால் நம் எதிர்காலம் பாலைவனம்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கீழ்த்தரமான பிரசாரத்தில் ஈடுபடுகிறார் சந்திரிகா

## காமினி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 21

சந்திரிகா மிகவும் கீழ்த்தரமான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். என் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு அவரிடம் ஆதாரம் இல்லை.

காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்கா ஊழல் படைத்தவர், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தவர் என்று கடந்த புதன்கிழமை பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியின்போது சந்திரிகா தெரிவித்தார்.

இதற்குப்பதில் அளிக்கும் விதத்திலேயே காமினி திஸநாயக்காவின் நேற்றைய பேட்டி இடம்பெற்றது.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் எனக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டபோது பிரேமதாஸா எனது சொத்துக்கள் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டார்.

தற்போது பிரேமதாஸாவைப் போன்றே சந்திரிகாவும் நடக்கிறார் என்று காமினி திஸநாயக்கா கூறினார். (இ-க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சகுந்தலாம்பிகை சதாசிவஐயர்

காரம்பன் மேற்கைச் சேர்ந்த திருமதி சகுந்தலாம்பிகை சதாசிவஐயர் 18 - 10 - 94 செவ்வாய்க்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் சி. சதாசிவஐயரின் (பபா ஐயர்) மனைவியாரும், ஸ்ரீரங்கநாதன் (ஆசிரிய ஆலோசகர், வேலணைக் கல்விக் கோட்டம்), விஜயலட்சுமி (இந்தியா), சிவநாதன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீவித்தியாரஞ்சனி (ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி), பாலசுப்பிரமணிய சர்மா (இந்தியா), ஹம்சவதனா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 20 - 10 - 94 இல் (வியாழக்கிழமை) இந்தியாவில் நடைபெற்றன.

தகவல்:
ச. ஸ்ரீரங்கநாதன்
(மகன்)

79, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
(33447)

## செ. சந்திரசேகரம் (சேகரம்)

(இளவாலை)

காடிவளை. இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலியில் வசித்து வந்தவருமாகிய செல்லத்துரை சந்திரசேகரம் காலமானார்.

இவர் செல்லத்துரை மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், சகுந்தலாதேவி, சாரதாதேவி, ரவீந்திரன், வசந்தாதேவி, காத்தீஸ்வரன், அகிலாதேவி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் தமையனாரும், ஆ. மயில்வாகனம் (நீர்வேலி) அவர்களின் மைத்துனருமாவரார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று பி. ப. 2.00 மணிக்கு செம்பாட்டுப் பிள்ளையார் வீதி, நீர்வேலியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. மயில்வாகனம்

நீர்வேலி.
(33449)

## திருமதி விக்னேஸ்வரி கணேஷரட்ணம் (கிளி)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி விக்னேஸ்வரி கணேஷரட்ணம் (கிளி) அவர்கள் (19- 10- 94) அன்று சிட்னி, அவுஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் இரா. கணேஷரட்ணம் (பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. சிவ. உ. சோமசேகரம் - வள்ளியம்மை ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், திருமதி இராஜேஸ்வரி சண்முகம் (முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி லோகாம்பிகை சுவாமிநாதன் (முன்னாள் ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. ப. இராஜரட்ணம் (சட்டத்தரணி சிவப்பிரகாசம் வீதி) அவர்களின் அன்பு மருமகளும், அருணா, ஊர்மிளா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22- 10- 94 சனிக்கிழமை, அவுஸ்திரேலியாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்,
திருமதி இரா. சண்முகம்
(சகோதரி)
114, அரசடி வீதி.
நீராவியடி.

முகவரி:
40, Dean Street,
South Strathfield,
N. S. W. 2136
Australia.
(33445)

## ஆறுமுகம் கைலாசபிள்ளை

[சின்னையா]

வேலணையைச் சேர்ந்த ஆறுமுகம் கைலாசபிள்ளை கொழும்பில் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னையா ஆறுமுகம், கமலாம்பிகை (காந்திஅம்மா) தம்பதிகளின் அன்பு மகனும், மதியாபரணம் - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், கமலினியின் கணவரும், மனோச், மனோசா, நம்பியா, நிரோசா ஆகியோரின் தந்தையும், கோபாலபிள்ளை (கோட்டை), மகாலட்சுமி, ஜெயமலர், கதிர்காமநாதன் (பிரான்ஸ் ஆகியோரின் சகோதரரும், புஸ்பா, குமாரசாமி (சுவிஸ்), புவிராசசிலன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொரளை றேமன்ஸ் மலர்ச்சாலையில் 18. 10. 94 செவ்வாய்க்கிழமை பி.பகல் 3 மணியளவில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செ. மதியாபரணம்
(மணியம்)
(மாமன்)

இல 12, கன்னாபுரம்,
யாழ்ப்பாணம்.
(33448)

இப்பத்திரிகை ... உதய ... லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் ... 292 ... இல ... கத்திலுள்ள அச்சகத்தில் ... அச்சிட்டு வெளியிடப்பெறது.

# யாழ். மாவட்ட தேர்தல் அட்சேபனை வழக்கு

## விசாரணைக்கு திகதி நிர்ணயம்

கொழும்பு, ஒக். 21

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவான 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி சரத் சில்வா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

1981 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் சட்டம் இலக்கம் 1 இன் பிரகாரம் மூன்று ஆட்சேபனை மனுக்களும் விசாரணைகளுக்காக ஒன்றாகவே எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த விசாரணைகள் நவம்பர் 14ஆம் திகதி, 23ஆம் திகதி டிசம்பர் 13 ஆம் திகதி ஆகிய நாட்களுக்கு நீதியரசர் சில்வாவினால் ஒத்திவைக்கப்பட்டன.

இருதரப்பினரும் தமது சாட்சியங்களின் பட்டியலை அடுத்தமாதம் முதலாம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த மூன்று ஆட்சேபனை மனுக்களும் யாழ்ப்பாண மாவட்ட சுயேட்சை குழு — 1 ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் ஆட்சேபனை மனுவில் தேர்தல் ஆணையாளர், யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இரு தேர்வு அத்தாட்சி அதிகாரிகள், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேச்சைக் குழு - 2 இன் (ஈ. பி. டி. பி) ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் விதிகளுக்கு புறம்பான வகையில் முறையற்ற விதத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என மூன்று மனுதாரர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ-4)

## திறந்த பல்கலை கற்கை நெறி விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பட்டமேறு கல்வி டிப்புளோமா 94/915 தொழிலுரிமைத்துவமும் சிற்வணிக முகாமைத்துவமும் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 30 ஆம் திகதி ஆகும். (க)

# முத்தமிழுக்கு விழாக்கள் எடுக்கப்பட வேண்டும்

## பாசையூர் பங்குத்தந்தை உரை

குருநகர், ஒக். 21

முத்தமிழுக்கு விழா காலம் காலமாக நடத்தப்பட வேண்டும்.

பாசையூர் பங்குத் தந்தை வண. சி. ஜீ. ஜெயக்குமார் அடிகள் இவ்வாறு கூறினார்.

கொழும்புத்துறை, சென். யோசப்ஸ் வித்தியாலய முத்தமிழ் விழா கடந்த 14 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வண. சி. ஜீ ஜெயக்குமார் அடிகள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் தமிழர்கள் அல்லர் என்ற கருத்துநிலவி வந்தது. அது தவறானது. நாம் தமிழர்களே. எமது மொழி தமிழ். கலாசாரம் தமிழ். பண்பாடு தமிழ். இதனைத், 'தமிழ்த்தூது' வண-தனிநாயகம் அடிகள் நாம் குருத்துவ மாணவர்களாக இருக்கையில் தெரிவித்து இருந்தார்.

— இவ்வாறு அவர் கூறினார்.

தலைமையுரையில் அதிபர் திரு. பி. பெனடிக்ற் கூறியதாவது:

"120 அடிகள் நீளமும், 22 அடிகள் அகலமும் கொண்டிருந்த வித்தியாலய மண்டபம் ஒரு சில விஷமிகளால் சிரழிக்கப்பட்டிருக்கும் இந்நிலையில் முத்தமிழுக்கு விழா எடுக்கும் மனநிலை எனக்கு வரவில்லை. ஆயினும் மாணவர்கள், ஆசிரியர்களின் உந்துதல் காரணமாக எளிய முறையில் விழா நடைபெறுகிறது." - என்றார்.

அதனைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (க-51)

# தமிழ் மொழிப் பாடல் கல்விக்கு பாடசாலைகள் முக்கியம் தரவேண்டும்

## கல்லூரி நூற்றாண்டு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஒக். 21

"இன்றைய தமிழர் சமுதாயம் தமது சொந்த மொழிப் பாடக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பாடசாலைகள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு ஆரம்ப விழாவில் நிறுவுநர் பேருரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

விழா கடந்த 14 ஆம் திகதி அதிபர் திரு. நா. ஜெயநாயகம் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் சண்முகதாஸ் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:

மாணவர்கள் சரியான தமிழ்ச் சொற் பதில்களைப் பயன்படுத்த வேண்டும்; தெளிவாக உச்சரிக்க வேண்டும். தமிழ்மொழிக் கல்வியில் அவர்கள் தமது ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

வேற்றுமொழி கலப்பில்லாத தமிழைப் பயன்படுத்துவதை ஓர் இலக்காகக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழைத் தமிழாக வளர்க்க முடியும்.

உலகில் தொழில் நுட்பம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதனால் புதிய கலைச்சொற்கள் தேவைப்படுகின்றன. அவற்றைத் தமிழில் ஆக்கிப் பயன்படுத்த வேண்டும்.

சீன, ஜப்பான் மொழிகள் புதிய தொழில் நுட்பங்களை எடுத்து விளக்கக் கூடிய மொழிகளாக வளர்ந்து நிற்கின்றன. அதற்குக் காரணம் உண்டு. அவர்கள் பிற மொழிச் சொற்களைக் கலக்காமல், தமது மொழிகளிலேயே புதிய சொற்களை ஆக்கிப் பழக்கத்துக்குக் கொண்டு வருகிறார்கள் — என்று கூறினார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி திரு. ப. கோபால கிருஷ்ணன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது;

வட்டு. இந்துக் கல்லூரியின் ஸ்தாபகரான அம்பலவாண நாவலர் தமது குருவான ஆறுமுக நாவலர் வழியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடு பட்டவர். மாணவர் சமுதாயம் இந்து சமயத்தையும் தமிழினையும் நன்கு கற்று நற்பிரஜைகளாக வாழ வேண்டும்.

இந்தக் கல்லூரியை நிறுவிய அம்பலவாண நாவலர் சைவமும் தமிழும் வளரப் பலபணிகளைச் செய்திருக்கிறார். ஆனால் அவரது சேவைகளை இன்றைய சந்ததி அறிவதற்கு வாய்ப்பில்லை.

இப்பகுதியில்வாழ்ந்த பெரியோர்களைப் புதிய சந்ததிகளுக்கு அறிமுகப்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்தில் முதுமாணித்துறை மாணவர்களைக்கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவிக்கிறோம். அந்த வரிசையில் அம்பலவாண நாவலரையும் சேர்த்துக் கொள்வோம் — என்றார்.

விழாவில் முதன்மை விருந்தினராக சங்கானைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

வட்டு இந்துக் கல்லூரியின் மாடிக் கட்டடத்தில் நூற்றாண்டு விழா நினைவாக கணித மூல வள நிலையம் விழாவில் திறந்து வைக்கப்பட்டது. (க-161)

### இராணுவத்தின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிகள் கூறுகின்றனர்.

இவ்வாறு பி.பி.ஸி தெரிவித்தது.

இராணுவம்பற்றி சந்திரிகா கூறியதை நாசூக்காகக் கூறவில்லை என்று சில இராணுவ அதிகாரிகள் குறைப்பட்டுள்ளார்கள் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-க)

### தேர்தலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படுவதை எதிர்ப்பதாக கூறினார்.

அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கும் தொடர்புடைய நிறுவனங்களிற்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் சொன்னார். (ஓ-4)

### மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தாக்கப்பட்டனர் என்றும் அவர்கள் தற்பொழுது மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தரிவிக்கின்றன.

புனுவுண்ணாவ முகாமில் இருந்து வந்த பொலிஸ் அதிரடிப்படையினரே இந்த வன்செயல்களை புரிந்தனர். (இ-4)

### இரண்டாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் ஒத்துழைப்பைப் பெறும் முறை குறித்தும் அரசுக் குழுவினர், இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது பேசுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஹேமா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் வவுனியாவுக்கு வருகை தருகின்றனர்.

வவுனியா மாவட்ட ஐ. தே. க. கிளைத் தலைவியும். எம்.பியுமான திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தலைமையில், வவுனியா நகரசபை மைதானத்தில் பிரசாரக் கூட்டம் நடைபெறும். (ஓ)

### பஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட பெண் தாம் தமிழர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவித்தார் எனினும் அவரின் கடவுச்சீட்டில் முஸ்லிம் பெண் ஒருவருடைய பெயரே பதிவு செய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

### இரு நாடுகளுக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

முஹம்மது மேலும் சொன்னதாவது:

அரசுக்குழு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் விடுதலைப்புலிகளின் கொடியின் கீழ், தலைவர் பிரபாகரனின் படத்தின் முன்னால் பேச்சுகளை நடத்தியுள்ளது.

இது இருநாடுகளுக்கு இடையில் நடைபெறும் பேச்சுகள் போன்று அமைந்திருந்தது. இது வெட்கக்கேடானது.

நாடு பிளவுபடுவதை நான் எதிர்க்கின்றேன். நாட்டின் ஐக்கியத்துக்காக உயிரைத் தியாகம் செய்யத்தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-எ)

# சலுகை அடிப்படையில் ஊழியருக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 21

அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் நலன் கருதி பருத்தித்துறை பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து, 750 இலக்க பாதை ஊடாக, யாழ்ப்பாணம் வரை சலுகை அடிப்படையில் மினி பஸ் சேவை ஒன்று நடத்தப்பட உள்ளது.

இந்த மினி பஸ் சேவை அரச அதிபரால் செயலக நலன்புரிக் கழகத்தினூடாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிற நிறுவனங்கள் வழங்கும் சலுகைகளைப் பயன்படுத்தாத — வடமராட்சியிலிருந்து யாழ் மாநகரசபை எல்லையுள் இருக்கும் அலுவலகங்களில் கடமை புரியும் — உத்தியோகத்தர்கள் தமது பெயர்களை செயலக நலன்புரிக் கழக அலுவலகத்தில் எதிர் வரும் திங்கட்கிழமைக்கு முன் பதிவு செய்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-4)

## இன்று முதல் கொடுப்பனவு

தென்மராட்சி, ஒக். 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒக்டோபர் மாதக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் தென்மராட்சிப் பிரதேச செயலக நிதிப் பிரிவில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

### லெப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதி, தாவடிச் சந்தியில் தாவடி வாழ் மக்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் ஈகச்சுடரேற்றி, லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரரின் பெற்றோரினால் நினைவுருவப் படம் திறந்து வைக்கப்படும். (ஓ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக, பொறியியல்துறைப் பேராசிரியர் வே. நவரெத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சரஸ்வதி நவரெத்தினராசா பரிசில்களை வழங்குவார்.

## வீரச்சாவு

மட்டக்களப்பு, ஒக். 21

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

கடந்த 17 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் காஞ்சிரங்குடாப் பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளை இராணுவத்தினர் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர்.

இதன்போது லெப்டினன்ட் மதன் (கதிர்காமர் பரமானந்தம் — மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தார். (ஓ-4)


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் வி. முகுந்தன்

விவேகானந்தன் — நித்தியா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் முகுந்தன் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று கண்டியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை பிரான்ஸிலிருக்கும் அன்பு அப்பா, அம்மா, பண்டத்தரிப்பிலிருக்கும் அம்மம்மா, அன்ராமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணா, அக்காமார், தங்கை, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் மருதடிவிநாயகர் அருள்பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

"மலர்வாசா"
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.
(சி/9420).

## G. S. லிங்கநாதன் அன் கோவின்

மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை வாரம்

எமது வாடிக்கையாளர் உட்பட அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

மலரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு அனைத்து ஐவுளிகளும்

மலிவு விலையில் விற்பனையாகின்றன

"மாபெரும் மலிவு விற்பனை"

ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை

13, 14, பெரியகடை வீதி, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.
(33446)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org